ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2030/40 - 2017 අගෝස්තු මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.03

2030/40 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: RPDS/LND/09/ACQ/07/23.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/15/2011/VE/166.

ஒரு பொது விடயத்திற்குத் தேவையான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், குருவிட கோரளை தெற்கு உட பத்துவ சிறு பிரிவில், இல. 153A, நவநகரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில், வெரலுப கிராமத்தில் அமைந்துள்ள அ.க.சி 347 இன் துண்டு இலக்கம் 653, 5.2633 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பாம்காடன் ஜம்புகஹ அராவ, கல்கொடதெனிய, பேடிகும்புர, அகலவத்த திகனஹேனவத்த மற்றும் தேன்னபிடவத்த என்னும் பெயர் கொண்ட காணியாகும்.

உரிமையாளர் - பலாங்கொடை பெருந்தோட்ட கம்பெனி, த. பெ. இல. 06, பாம்காடன், இரத்தினபுரி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீ. எம். கோட்டவத்த,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி,
2017, யூலை 31.

8 - 676

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1A - G 26012 - 17 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.